# லண்டனில் நடைபெறவுள்ள தமிழ் புத்தக கண்காட்சி

பிரித்தானியாவில் தமிழர்களுக்கென பிரத்தியேகமாக தமிழ் புத்தக கண்காட்சி நிகழ்வொன்று நடைபெறவுள்ளது.

இந்த கண்காட்சி நாளை(17.06.2023) மற்றும் நாளை மறுதினம்(18.06.2023) காலை 11 மணி தொடக்கம் இரவு 7.30 வரை நடைபெற உள்ளது.

500 தலைப்புகளுக்கு மேற்பட்ட தமிழின் முக்கிய புத்தகங்களுடன் இரு நாள் நிகழ்வாக நடக்கவுள்ளது. எழுத்தாளர்கள், நூலாசிரியர்கள் தங்கள் புத்தகங்களை காட்சிப்படுத்தவும், விற்கவும், வாசகர்களை சந்திப்பதற்கும், மற்றும் நூல்களை அறிமுகப்படுத்தவுமான ஏற்பாடுகள் உள்ளன.

வாசகர்கள், செயற்பாட்டாளர்கள், மொழி ஆர்வலர்கள், எழுத்தாளர்கள் மற்றும் நூலாசிர்களுக்கு இதுவொரு நல்ல வாய்ப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# Tamil Book Fair

# London

**17, 18 JUNE 2023**

**Saturday, Sunday**

**10am TO 8.00pm**

**Grand View Hall**
**10 Stonefield Way**
**Ruislip**
**HA4 0JS**
**Near Tube station- Ruislip, South Harrow,South Ruislip**
(இலவச வாகன தரிப்பிடம்)

## கலை, இலக்கியம், மொழி சார்ந்த முக்கிய பண்பாட்டு நிகழ்வு!

## புத்தகங்களுடனும் நிகழ்வுகளுடனுமான வாய்ப்பு!

**"புத்தகங்களை நேசிப்போம் மொழியின் உயிரது!"**

- சிறுவர் நூல்கள், நாவல், சிறுகதை, கவிதை, அரசியல், சமூகம், வரலாறு பண்பாடு, மருத்துவம் என 500க்கும் மேற்பட்ட தலைப்புகளினான நூல்கள்!

**இரு நாட்களிலும்...**

- சிறுவர் அரங்குகள்
- கவிதா நிகழ்வு
- ஆவணப்படம்
- கனடா, சுவிஸ், இந்தியா உட்பட இங்கிலாந்து நாடுகளிலுள்ள எழுத்தாளர்கள் கல்வியலாளர்களின் உரைகள்/ சந்திப்புகள்
- நூல் அறிமுகங்கள்
- கலந்துரையாடல்கள் (English, Tamil)

தமிழில் முக்கியமான நூல்களுடன்
மொழிபெயர்ப்பு நூல்களையும் பார்க்கலாம்! வாங்கலாம்!

தொடர்பு : 07817262980

அனைவரையும் அழைக்கிறோம்!

## சிறுவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகள்

கனடா, இந்தியா மற்றும் ஐரோப்பா நாடுகளில் இருந்து பல எழுத்தாளர்கள் சிறப்பு விருந்தினர்களாக இந்த நூல் கண்காட்சி நிகழ்வில் கலந்துகொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிறுவர்களுக்கான தமிழ் வாசிப்பையும், கற்றலையும் ஊக்குவிக்கும் நூல்களும் அவர்களுக்கான சிறப்பு நிகழ்வுகளும் உள்ளன. இதுமட்டுமன்றி நூலறிமுகம், எழுத்தாளர் உரைகள், கவிதை வாசிப்பு, நாடக அளிக்கைகளும் உள்ளன.

இதேவேளை வாசகர்களுக்கு எந்த வகையான நூல்கள் தேவையோ அதனை முன்கூட்டியே தெரியப்படுத்தினால் இந்த நிகழ்வில் பெற்றுக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து தர முடியும் ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. கண்காட்சி நடைபெறும் இடம்:

**London Tamil Book Fair. Grand View Hall, UNIT 1, 10 Stonefield Way, Ruislip HA4 0JS.**

***Source:***

***https://tamilwin.com/article/tamil-book-fair-to-be-held-in-london-1686930439?itm_source=parsely-api***